# சாதனையாளர்களின்
# வெற்றி ரகசியங்கள்
( Success Secret )



தொகுப்பாசிரியர் :

**எஸ். கதிரேசன்**

திருவரசு புத்தக நிலையம்

Vijay Systems

# 40

# ஒய்வில்லாத உழைப்பே உயர்வைத் தரும்

**30-க்கும் மேற்பட்ட கம்ப்யூட்டர் நூல்களைத் தமிழில் எழுதி சாதனை படைத்த காம்கேர். புவனேஸ்வரி**

**வெ**ற்றியைப் பற்றி ஆங்கிலத்தில் ஒரு பொன்மொழி உண்டு. "வெற்றிபெற வேண்டும் என்று பலர் கனவு கண்டுகொண்டிருப்பார்கள். அதேவேளையில் சிலர் அதற் கான காரியங்களில் ஈடுபட்டுச் செயல்படத் தொடங்கி விடுவார்கள்" என்பதுதான் அந்தப் பொன்மொழி. மற்றவர்களைவிட நாம் அறிவிலும், ஆற்றலிலும், பண்பு களிலும், ஒழுக்கத்திலும் மேம்பட்டு நிற்கவேண்டும் என்னும் உந்துசக்திதான் ஒருவரை வெற்றியாளராக உருவாக்கித் தரும். சிலருக்கு இந்தச் சுபாவம் இயற்கை யிலேயே அமைந்திருக்கும்.

தலைமைப் பொறுப்பை ஏற்பதற்குரிய அடிப்படை யான இயல்பு, எவரையும் சாராமல் சொந்தக் காலில் (Independent) நிற்கப் பழகுவதாகும். சிறு வயது முதல்

இந்தக் குணாம்சத்தை வளர்த்துக்கொள்வது நல்லது. எனது தாய் தந்தை இருவருமே, தொலைபேசித்துறையில் பணிபுரிந்தவர்கள். சிறுவயதிலேயே தம்பி, தங்கைகள் எனது அரவணைப்பில் வளர்ந்தார்கள். அம்மா, அப்பா இருவரும் அலுவலகம் விட்டு வரத் தாமதமாகும் வேளை களில் நான் வீட்டில் இருப்பேன். அப்போதே வெளி நபர்கள் வந்து கேட்டால், சமயோசிதமாக வீட்டின் உள்ளே போய், அம்மாவிடம் கேட்டு விட்டு வந்து பதில் சொல்வதுபோல் பதில் சொல்வேன். அப்போதுதான் சிறு குழந்தைகள் மட்டும் வீட்டில் இருக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாமல் இருக்கும். அப்போதே ஒரு ஆளுமைத்திறன் எனக்கு வந்துவிட்டது. இந்தச் சம்பவத்தை ஓர் உதாரணத்திற்காகச் சொன்னேன்.

பணிமாற்றம் காரணமாக நான், பல பள்ளிக்கூடங் களில் படிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எந்தப் பள்ளிக்கூடத்தில் பயின்றாலும், நான், எனது படிப்பு, எனது தாய்—தந்தையர் என்பதை மட்டும் கவனத்தில் கொள்வேன்.

சாதிக்கத் துடிக்கும் இளைஞர்கள், யுவதிகள் எவராக இருந்தாலும், எந்த நேரத்திலும், எந்தச் சூழ்நிலையையும் தைரியமாக எதிர்கொண்டு வெற்றிபெற முனைப்போடு செயலாற்ற வேண்டும்.

நம் முயற்சிகளில் நல்ல பலன் கிடைக்க வேண்டு மென்றால், ஓய்வில்லாத உழைப்பு மிகவும் அத்தியாவசிய மான ஒன்றாகும். உழைப்பு என்றால் நேரம் காலம் பார்க்காத தீவிர உழைப்பு மிகவும் முக்கியம். நான் இதுவரை 30 கம்ப்யூட்டர் நூல்களைத் தமிழில் எழுதி இருக்கிறேன். சில நாட்கள் 5 மணி நேரத்திற்கும்

குறைவாகவே தூங்கி இருக்கிறேன். 1991-ல் கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்து முடித்துவிட்டு, அமெரிக்காவிற்கோ, ஐ.பி.எம்., ஐ.சி.எம். நிறுவனத்திற்கோ, பெரிய சம்பளத் திற்குப் போயிருக்கலாம். ஒரே ஒரு கம்ப்யூட்டருடன் பயிற்சி நிலையத்தைத் தொடங்கினேன். இன்று அது 'காம்கேர் கம்ப்யூட்டர் சாப்ட்வேர் நிறுவன'மாக வளர்ந் துள்ளது.

நல்ல நிர்வாகியாகத் திகழ விரும்பும் எவருக்கும் கண்டிப்பு மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

நிர்வாகத்தில் எனக்கு மேல் 'பாஸ்' என்று எவரும் கிடையாது. எனக்கு அடுத்து இன்னொரு தலைமையும் கிடையாது. நான் எனக்கு அடுத்து சம நிலையிலேயே எனது பணியாளர்களை வைத்திருக்கிறேன். அவர்கள் அனைவரும் இன்னொரு நபர் மூலமாக என்னைத் தொடர்பு கொள்ளத் தேவையில்லை. நேரடியாக என்னைத் தொடர்பு கொள்ளலாம். இதில் பல அசௌ கரியங்கள் உண்டு. வேலைப்பளு கூடுதலாக இருந்தாலும், நிர்வாகத்தின் எல்லாத் தளங்களும் நமது மேற்பார்வை யிலேயே நடைபெறும்.

கம்ப்யூட்டர், மல்டி மீடியா துறை இப்போது போட்டி மிக்கதாக உள்ளதால், எனது ஊழியர்கள் அவரவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை முடித்துக் கொடுத்ததும் சம்பளத்துடன் கூடிய விடுப்பாக 10 நாட்களை 3 மாதத் திற்கொரு முறை வழங்குகிறேன். அவர்கள் வேறு பணியிடங்களுக்குச் செல்வதென்றாலும் செல்லலாம். தொடர்ந்து பணிசெய்வதென்றாலும் பணிபுரியலாம். அது அவர்கள் விருப்பத்திற்குட்பட்டது. பயிற்சியில் சேருப வர்கள் யாவரும் பணியாளர்களாகவும், நல்ல ஆளுமைத்

திறன் மிக்கவர்களாகவும் விரைவில் உருவாகி விடுவார்கள்.

தற்போது எனது கம்ப்யூட்டர் நூல்களை, மாநிலக் கல்லூரியில் முதுகலை தமிழ்ப்பாட மாணவர்களுக்குப் பாட நூலாக வைத்துள்ளனர். குழந்தைகளுக்கான கதைகள், பேரன்—பேத்தி பாடல்கள், கந்தர் சஷ்டி கவசம் ஆகியவற்றை சி.டி.யில் தயாரித்து வெளியிட்டுள்ளேன்.

இந்தச் சாதனைகளெல்லாம் ஒருநாள் ஒரு பொழுதில் நிகழ்ந்து விடுவதில்லை. கடின உழைப்பு, ஆளுமைத் திறன் இவையே வெற்றியின் இரண்டு கண்கள் ஆகும்.